بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 27/05/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**இஸ்லாத்தின் முன்னேற்றம் குறித்து அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த அந்த வாக்குறுதிகள் நிச்சயம் நிறைவேறும். எவர்கள் கிலாஃபத்துடன் இணைந்திருப்பார்களோ அவர்கள் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசுகளாகிக் கொண்டே இருப்பார்கள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

இன்று 27 மே ஆகும். இந்த நாள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கிலாஃபத் தினமாக அறியப்படுகின்றது. நாம் எல்லா வருடமும் கிலாஃபத் தினக் கூட்டங்கள் நடத்துகிறோம். ஆனால் ஏன்? இக்கேள்விக்கான பதிலை நாம் எந்நேரமும் நம் முன் வைத்திருக்க வேண்டும். நமது பிள்ளைகளுக்கும் அதில் கவனம் செலுத்துமாறும் சிந்திக்குமாறும் கூறவேண்டும். இந்த தினத்தின் ஆரம்பம் 27 மே 1908 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. அல்லாஹு தஆலா தனது வாக்குறுதிகளுக்கு ஏற்ப நம் மீது அருள் புரிந்தவாறு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கிலாஃபத் அமைப்பை நிலைநாட்டினான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உங்களிடம் இறுதிகாலத்தில் நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் ஏற்படும் என்று கூறுவதும், இதைக் கூறிய பின்னர் அன்னார் மௌனமாகி விடுவதும், இந்த கிலாஃபத் அமைப்பு ஒரு நீண்ட காலம் தொடரக்கூடிய அமைப்பாகும் என்பதை வெளிப்படுத்துகிறது. சில மக்கள், 'ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகு தொடரக்கூடிய இந்த அமைப்பு விரைவாக முடிந்து விடும்' என்பதை இந்த மௌனத்துக்குப் பொருளாகப் புரிகிறார்களே! இந்த மக்கள் அனைவரும் தவறிழைக்கிறார்கள். இந்த அமைப்பு தொடரக்கூடிய அமைப்பாகும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே இதற்கு விளக்கம் அளித்து விட்டார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

நீங்கள் இரண்டாவது வல்லமையையும் பார்க்க வேண்டியது அவசியமாகும். அது வருவது உங்களுக்குச் சிறந்ததாகும். ஏனென்றால், அது நிரந்தரமானது. அதன் தொடர் மறுமை வரை முடிவுறாது. நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால், நான் சென்று விட்டால், பிறகு இறைவன் என்றைக்கும் உங்களுடன் இருக்கும் அந்த இரண்டாவது வல்லமையை உங்களுக்காக அனுப்பி விடுவான்.

எனவே நம்மில் கிலாஃபத்தே அஹ்மதிய்யாவுடன் எப்போதும் இணைந்துள்ளவர்கள் மற்றும் தங்களது சந்ததிகளையும் அதற்காக வலியுறுத்திக் கொண்டிருப்பவர்கள் நற்பாக்கியம் பெற்றவர்கள் ஆவார்கள். மேலும், அஹ்மதிய்யா

கிலாஃபத்தை ஒரு குறிப்பிட்ட காலம் வரை வரையறுக்க விரும்புபவர்கள் அல்லது அந்த சிந்தனை கொண்டு இருப்பவர்கள் துர்பாக்கியசாலிகள் ஆவர்கள். அப்படிப்பட்ட மக்கள் வழக்கம் போல் தோல்வியைக் காண்பார்கள்.

அல்லாஹுத்தஆலா இஸ்லாத்தின் மறுமலர்ச்சி மற்றும் முன்னேற்றம் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அளித்துள்ள வாக்குறுதிகள் நிச்சயம் நிறைவேறும். ஜமாஅத் இன்ஷா அல்லாஹ் இஸ்லாத்தின் வெற்றியின் நாள்களைக் காணும். எவர்கள் கிலாஃபத்துடன் இணைந்து இருப்பார்களோ அவர்கள் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசுகளாக ஆகிக் கொண்டே இருப்பார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹு தஆலாவின் எந்த வாக்குறுதிகளை பற்றி எடுத்துரைத்துள்ளார்களோ அவை தமது உச்சத்தை அடைய வேண்டியுள்ளது. மேலும், இது அன்னாருக்குப் பிறகு நிலைபெறும் கிலாஃபத் அமைப்பின் வாயிலாகவே அடைய முடியும். அல்லாஹுத்தஆலா ஜமாஅத்துக்கு முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றான். தானே மக்களை வழிநடத்துகின்றான். கிலாஃபத்துடன் அவர்களை இணைக்கின்றான். மேலும், இது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட விஷயமாகும். ஜமாஅத்தினர்களையும் காலத்தின் கலீஃபாவையும் சாத்தியமற்ற ஓர் உறுதியான கட்டமைப்பில் ஒன்றிணைப்பது என்பது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகும்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் மக்கள் பைஅத் செய்தது, அல்லாஹு தஆலாவின் சிறப்பான உதவியும் ஆதரவும் இல்லை என்றால், வேறென்ன? எல்லா ஜமாஅத்களிலும் இருக்கின்ற சில நயவஞ்சக இயல்புடைய மக்களைத் தவிர, கிலாஃபத்துக்காக மாய்ந்து போகக்கூடியவர்கள் அதிகரித்துக் கொண்டே சென்றனர்.

பிறகு, இரண்டாவது கிலாஃபத்தின் தேர்தலின் போது இந்த எதிரிகளே கூச்சலிட்டார்கள். இந்த மக்கள் தூண்டிவிட்டும், கூச்சலிட்டும், குழப்பத்தை உருவாக்கி இருந்த போதும் கூட, எந்த அளவுக்கு வேகமாக ஜமாஅத் முன்னேற்றம் அடைந்து கொண்டே சென்றது என்பதை உலகம் பார்த்தது. உலகில் மிஷன் ஹவுஸ்கள் திறக்கப்பட்டன. பள்ளிவாயில்கள் கட்டப்பட்டன. நூல்கள் வெளியிடப்பட்டன. எந்தப் பணிகளை செய்வதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வந்தார்களோ அவை முன்னேறிக் கொண்டே சென்றன.

பிறகு மூன்றாவது கிலாஃபத்தில், அக்கால அரசாங்கத்தின் மிக கடுமையான தாக்குதல்கள் இருந்தும் அல்லாஹுத்தஆலா ஜமாஅத்துக்கு முன்னேற்றங்களை வழங்கினான். ஜமாஅத்தின் கைகளில் திருவோட்டை ஏந்த செய்யும் எண்ணம் கொண்டிருந்தவர்களே மோசமான நிலையில் உலகை விட்டும் சென்றார்கள்.

பிறகு நான்காவது கிலாஃபத்தில் முன்னேற்றங்களின் மற்றொரு கதவு திறந்தது. ஜமாஅத் அல்லாஹு தஆலாவின் உதவிகள் மற்றும் ஆதரவுகளின் புதிய காட்சிகளைக் கண்டது. இஸ்லாத்தைப் பரப்புவதற்கான புத்தம் புதிய வழிகள் திறந்தன. காலத்தின் கலீஃபாவின் கைகளை வெட்ட நினைத்தவர்களின் கைகளே வெட்டு பட்டன. மேலும் காற்றில் அவர்களது உடல்கள் சிதறின. ஆனால், ஜமாஅத்தின் முன்னேற்றத்தின் அடிகள் தடைபடவில்லை. தப்லீகின் களம் விரிவடைந்தது. MTA உதயமானது. அதன் வாயிலாக ஒவ்வொரு வீட்டிலும் ஜமாஅத்தின் தூதுச் செய்தி சென்றடைய ஆரம்பித்தது. இவை அல்லாஹு தஆலாவின் வாக்குறுதிகள் நிறைவேறுவது அன்றி வேறென்ன?

பிறகு ஐந்தாவது கிலாஃபத்திலும் அல்லாஹு தஆலா தனது உதவிகள் மற்றும் ஆதரவுகளின் காட்சிகளைக் காண்பித்தான். ஒன்றிற்குப் பகரமாக MTA வின் 7, 8

சேனல்கள் பல்வேறு மொழிகளில் உதயமாயின. உலகின் பல்வேறு மொழிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளின் மொழியாக்கங்கள் ஆக ஆரம்பித்தன. உலகின் மூலை முடுக்குகள் எல்லாம், எங்கு முன்னர் MTA சென்றடையவில்லையோ அங்கும் MTA சென்றடைந்த விட்டது. மேலும் அங்குள்ளவர்களின் மொழியில், அம்மக்கள், அந்த நாடுகள் மற்றும் அந்த பகுதிகளில் வசிப்பவர்களுக்கு அஹ்மதிய்யத் மற்றும் உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்றடைய தொடங்கியது. இதனால் லட்சக்கணக்கான நல்ல ஆன்மாக்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பு கிடைத்தது. பிறகு MTA மற்றும் ரேடியோ நிகழ்ச்சிகள் மட்டுமின்றி, அல்லாஹு தஆலா தானும் மக்களுக்கு வழிகாட்டினான். மேலும், மக்களுக்கு கனவுகளின் வாயிலாக மற்றும் பல்வேறு நூல்களின் வாயிலாக அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்கினான்.

நாம் அஹ்மதிய்யத்தின் வரலாற்றை பார்க்கும் போது, எவ்வாறு சில மக்களைத் தானே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக்கொள்வதன் பால் அல்லாஹுத்தஆலா அன்னாரது காலத்திலும் வழிநடத்தியிருந்தான் என்பது தெரியவருகின்றது. பிறகு இதே தொடர் ஹஸ்ரத் முதலில் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது காலத்திலும் தொடர்ந்தது. அல்லாஹுத்தஆலா தானே வழிநடத்தி வந்தான். பிறகு இரண்டாவது கிலாஃபத்திலும் இவ்வாறான பல சம்பவங்கள் உள்ளன. புராதான குடும்பங்களில் எவ்வாறு அல்லாஹுத்தஆலா அவர்களது பெரியவர்களுக்கு உண்மையை ஏற்றுக்கொள்ளும் நல்வாய்ப்பை வழங்கினான் என்பது பற்றிய அறிவிப்புகள் கூறப்பட்டு வருகின்றன. பிறகு, மூன்றாவது கிலாஃபத்திலும் இந்தத் தொடர் தென்படுகின்றது. நான்காவது கிலாஃபத்திலும் நல்ல ஆன்மாக்களை அல்லாஹு தஆலா அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதன்பால் வழிநடத்தினான்.

இவை அனைத்தும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அல்லாஹுத்தஆலா செய்த வாக்குறுதிகளின் விளைவே ஆகும். இவ்வாறு ஒவ்வொரு கிலாஃபத் காலகட்டத்திலும் ஜமாஅத் முன்னேற்றம் அடைந்து கொண்டே இருந்தது. ஐந்தாவது கிலாஃபத்திலும் அல்லாஹு தஆலாவின் இந்த நடைமுறையே இருக்கின்றது. அல்லாஹ் தஆலா தப்லீகின் புதிய புதிய வழிகளையும் திறந்து கொண்டே செல்கின்றான். மேலும், மக்களது உள்ளங்களையும் இஸ்லாத்தின் உண்மை தூது செய்தியான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது தூதுச் செய்தியை கேட்பதன் பால், அதனை ஏற்றுக் கொள்வதன்பால் ஈடுபடுத்திக் கொண்டே செல்கின்றான். முழுக்க முழுக்க இறை உதவியை வெளிப்படுத்துகின்ற, அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் பல்வேறு சம்பவங்கள் நடைபெறுகின்றன. இல்லையேல் வெறும் மனித முயற்சிகளால் ஒருபோதும் இவ்வாறு மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உலகம் முழுவதிலுமிருந்து கனவுகள் வாயிலாக அஹ்மதிய்யத்தை ஏற்றுக்கொண்டவர்களின் ஈமானுக்கு வலுவூட்டும் சம்பவங்களைக் கூறினார்கள். பிறகு கூறினார்கள்:* எனவே அல்லாஹுத் தஆலா மக்களின் உள்ளங்களில் உருவாக்குகின்ற அந்த உளத்தூய்மை மற்றும் நன்றி விசுவாசம் உள்ள தொடர்பு இதுவே ஆகும். இன்ஷா அல்லாஹ் தஆலா மறுமை வரை அல்லாஹ் தஆலா இந்த விசுவாசத்திலும் உளத்தூய்மையிலும் முன்னேறுகின்ற மக்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய ஜமாஅத்துக்கு வழங்கிக் கொண்டே இருப்பான். அஹ்மதிய்யா கிலாஃபத்துக்கு வழங்கிக் கொண்டே இருப்பான். உலக வாதிகளால் இதனைப் புரிந்துகொள்ள முடியாது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* ஜெர்மனியில் ஓர் அரேபியர் பைஅத் செய்ததும் அவரை அறிந்த ஒருவர் அவரிடம், 'நீர் காதியானி ஆகிவிட்டீரா?' என்று கேட்டார். அதற்கு அந்தப் புதிய அஹ்மதி, 'நீங்கள் இங்கு நூறு அரேபியர்கள் உள்ளீர்கள். உங்களால் எந்த விஷயத்திலும் ஒன்று கூட முடியாது. அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஓர் இமாம் இருக்கின்றார். மேலும், அவரது கூற்றிற்கு ஜமாஅத் எழுகிறது; அமர்கிறது. இதனால் தான் அவரது பணிகளில் அருள் இருக்கின்றது. உங்களுடன் சேர்ந்து கொண்டு அவர்களை விட்டு விடுவதற்கு உங்களிடம் என்ன சிறப்பு உள்ளது என்று இப்போது நீங்களே கூறுங்கள்! என பதிலளித்தார்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* ஆகவே ஒவ்வொர் அஹ்மதியும் கிலாஃபத்துடன் இணைந்திருக்கும் வரை, அல்லாஹு தஆலாவின் அருள்களுக்கு வாரிசாகிக் கொண்டே இருப்பார். அதற்காக நாம் நமது செயல்களையும் இறைவனது போதனைகளுக்கு ஏற்ப அமைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இந்த அருள் பலன் தரும். அல்லாஹு தஆலாவின் வாக்குறுதியும் இதுதான். அதாவது எவர்கள் ஈமான் கொள்வதுடன் தங்களது செயல்களையும் அல்லாஹுத் தஆலா கூறிய வழிமுறையின் படி அமைப்பார்களோ அவர்கள் கிலாஃபத்தின் அருள்களிலிருந்து பலன் பெற்றுக் கொண்டே இருப்பார்கள். அதாவது, நாம் அல்லாஹ் தஆலாவின் மீது முழுமையாக நம்பிக்கை கொண்டவாறு அவனது வணக்கத்தின் உரிமையை நிறைவேற்றுபவர்களாகவும் இருக்க வேண்டும். மேலும் நமது ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வின் திருப்தியைத் தேடுவதாக இருக்க வேண்டும். அப்போது தான் நாம் இந்த அருளை அடைவோம்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* ஒவ்வோர் அஹ்மதிக்கும் கிலாஃபத்துடன் உளத்தூய்மை மற்றும் நன்றி விசுவாசத்துடன் கூடிய தொடர்பு இருக்க வேண்டும். மேலும், இந்தப் படித்தரத்தை அடைபவர்களே பைஅத்தின் உரிமையை செலுத்துபவர்களாக இருப்பார்கள். மேலும் இது நடக்கும் போது தான், நாம் இன்று கிலாஃபத் தினத்தை கொண்டாடுவதன் உரிமையை செலுத்தியவர்களாக இருப்போம். அல்லாஹ் நம் அனைவருக்கும் கிலாஃபத்திடம் பைஅத் செய்ததற்கான உரிமையை செலுத்துபவர்களாக ஆவதற்கும் அல்லாஹ்வின் அருள்களையும் பெறுபவர்களாக ஆவதற்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ الله رحمكم الله اِنَّ اللهَ
يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ
يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)**